## 115. நீரே நீரே தேவனே

பல்லவி

நீரே நீரே தேவனே
நீரே நீரே கர்த்தரே
நாவுகள் யாவும் அறிக்கை செய்யும்
மேலான நாமத்திற்குரியரே

அனுபல்லவி

உம் நாமம் அதிசயமே
உம் நாமம் வல்லமையே
உம் நாமம் விடுதலையே
உம் நாமம் மேலானதே

சரணங்கள்

1. இயேசுவின் நாமத்தையே
வானோர் பூதலத்தோர்
பூமியின் கீழானோர்
முழங்கால் யாவும் என்றும் முடங்கிடுமே
- உம் நாமம்

2. மரணத்தை வென்ற நாமம்
பாதாளம் ஜெயித்த நாமம்
பிசாசின் தலையை சிலுவையில் நசுக்கி
வெற்றி சிறந்த நாமம்
- உம் நாமம்

3. ஜீவ காலமெல்லாம்
மரணபயத்திற்குள்ளே
அடிமைதனமாய் இருந்த நம்மை
விடுதலை பண்ணினார்
- உம் நாமம்